පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය - 79

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කෑගල්ල

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79

மாவட்ட செயலகம், கேகாலை

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களுக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் படிமுறைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No –79

District Secretariat Kegalle

Submission of observations of the Hon Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No 119 (4)

பாராளுமன்ற தொடர் இலக்கம் - 79

மாவட்ட செயலகம் – கேகாலை

குழுவினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயன்முறைகள் / நிகழ்கால நிலைமை
நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரைப்படுத்தப்பட்டு பேணப்படாமை	மாவட்ட செயலகத்திற்காக நிலையான சொத்துக்கள் இடாப்பொன்று பேணப்படுவதுடன் அதனை நாளதுவரைப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் பிரதேச செயலகங்களுக்கும் நிலையான சொத்துக்கள ஏட்டினை நாளதுவரைப்படுத்திப் பேணும்படி அறிவுருத்தப்பட்டுள்ளது.
அத்துமீறி பிடிக்கப்பட்டவைகள் தொடர்பான இடாப்பு நாளதுவரைப்படுத்திப் பேணப்பட்டிருக்கவில்லை	அத்துமீறிப் பிடிக்கப்பட்டவைகள் தொடர்பான இடாப்பை நாளதுவரைப்படுத்திப் பேணும்படி பிரதேச செயலாளர்களுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது
கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு வினாக்களிற்காகவும் ஒரு மாதத்தினுல் பதில்கள் அனுப்பப்படாமை	தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது
உள்ளக கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்தினுல் பதில் அளிக்காத சந்தர்பபங்கள் அறிக்கைப்படுத்தப்பட்டமை	தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது
மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற அனைத்து பிரதேச செயலகங்களிலும் கணக்காய்வுக் குழுக்கள் குறைந்த அளவிலேனும் கூடியிருக்கவில்லை	2024 ஆம் ஆண்டில் முதலாம் மற்றும்இரண்டாம் காலாண்டினுல் மாவட்ட செயலகத்திற்குரித்தான அனைத்து பிரதேச செயலகங்களிலும் கணக்காய்வுக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளது
அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை	உத்தியோகபூர்வ வாகனங்கள் தவிர்ந்த மாவட்ட செயலகத்தின் அனைத்து ஒதுக்கு வாகணங்களிலும் அரச இலட்சினை

	பொறிக்கப்பட்டுள்ளது. வாகணங்களில் அரச இலட்சினையை பொறிக்கும்படி பிரதேச செயலகங்களுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது.
நி.பி. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்காலிக துணை முற்பணம் பணி நிறைவடைந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை	தற்காலிக துணை முற்பண பணி நிறைவடைந்து 14 நாட்களுக்குள் தீர்த்தல் போதுமானது என அறிவுருத்தப்பட்டிருந்தமையினால் 10 நாட்களுக்குள் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டாலும் தற்போது சம்பந்தப்பட்ட பணி நிறைவடைந்த திகதிக்கு அடுத்த நாளே முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
இணைப்பு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தவிர்ந்த அனுமதிக்கப்பட்ட எல்லையை தாண்டி பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்	மாவட்ட செயலாளருக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அதிகாரம் கையளிக்கப்படவில்லை என்பதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அதிகாரி பொது நிர்வாக அமைச்சின் செயலாளராவார். மிகையான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது.
மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை	இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்களுடன் கலந்துரையாடி, 2024 ஆம் வருடத்திற்காக மாதாந்தம் குழு கூடுகின்ற தினங்கள் தொடர்பாக திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2024 ஆம் வருடத்தில் ஜனவரி 05,பெப்ரவரி 14, மார்ச் 13, மே 02, மற்றும் ஜூன் 20 ஆம் திகதிகளில் ஜூலை மாதம் இறுதியாகும்போது 05 மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
மாவட்ட செயலாளரினால் கூட்டப்படுகின்ற பிரதேச செயலாளர்களின் கூட்டம் மாதாந்தம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டிலிருந்து மாதாந்தம் பிரதேச செயலாளர்களின் மாநாட்டை நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மாவட்ட வீடமைப்புக் குழு மாதாந்தம் கூட்டப்பட்டிருக்கவில்லை	மாவட்ட வீடமைப்புக் குழுவில் கலந்துரையாடப்படுவதற்கு விஷேட விடயங்கள் இல்லாததனால் மாதாந்தம் கூட்டத்தை

	நடாத்துதல் அவஷியமற்றது என வீடமைப்பு அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டதனால் மாதாந்தம் மாவட்ட வீடமைப்புக் குழு நடாத்தப்படவில்லை என்பதுடன் முன்னேற்ற மீளாய்விற்காக 03 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டம் நடாத்தப்பட்டது.
மாவட்ட விலை நிர்ணயக் குழு மாதாந்தம் கூட்டப்பட்டிருக்கவில்லை.	நிர்மாணம் தொடர்பாக பொருட்களின் விலைகளின் ஏற்ற இறக்கம் ஒரு தலைப்பட்சமாக இடம்பெறுவதாலும், விலை நிர்ணயக் குழுக்களை நடாத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் இல்லை என்பதனாலும் விலை நிர்ணயக் குழுவை மாதாந்தம் நடாத்துவதற்கு இயலாமல் போனதுடன் அது காலாண்டிற்கொருமுறை நடாத்தப்படும்.
நிறுவனம் தொடர்பாக பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்காக இணைய தளமொன்றை தாபித்து பேணப்பட்டிருக்கவில்லை.	பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்காக சமமான மாதிரியொன்றுடனான இணைய தளங்களை அறிமுகப்படுத்தி அதனை நாளதுவரைப்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்ப உத்தயோகத்தர் / உதவியாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பொதுமக்களுக்கு நிறுவனம் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக இணைய தளமொன்று 2022 ஆம் வருடமாகும்போது பேணப்பட்டது. அதனை தாபித்திருப்பது மாவட்ட செயலகம் அல்ல என்பதுடன் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் தாபிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள குறித்த இணையதளம் மாவட்ட செயலகத்தின் தகவல் தொழில்நுட்பக் கூறின் மூலம் நாளதுவரைப்படுத்தும் நடவடிக்கைகளை மாத்திரம் தொடர்ச்சியாக இதுவரையில் மேற்கொள்ளப்படுகின்றது. சம்பந்தப்பட்ட தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் இணைய தளத்தை நாளதுவரைப்படுத்த முடியாத சந்தர்ப்பம் காணப்படுவதுடன் தகவல்கள் கிடைக்கும்

	சந்தர்ப்பங்களில் நாளதுவரைப்படுத்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெறுகின்றது.
2018.01.24 ஆம் திகதிய 05/2018 (1) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் திருத்தப்பட்ட 2008.02.06. ஆம் திகதிய 05 / 2008 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிரசைகள்/ சேவை பெறுனர் பட்டயத்தினை முறையாக தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை.	பிரசைகள்/ சேவை பெறுனர் பட்டயம் மாவட்ட செயலக இணைய தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், டிஜிட்டல் திரையொன்றில் குறித்த பட்டயம் அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
நிறுவனத்தின் பிரசைகள் / சேவை பெறுனர் பட்டயம் செயற்படுதல் தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கு செயன்முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	மாவட்ட செயலகத்திற்கு நேரடியாக பொதுமக்கள் தொடர்புருகின்ற சந்தர்ப்பங்கள் குறைவடைவதுடன் அவ்வாறு பொதுமக்கள் வருகைதருகின்ற துப்பாக்கி மற்றும் வெடிப்பொருட்கள் பிரிவில் கடமை நடவடிக்கைகள் தொடர்பாக பிரசைகள் / சேவை பெறுனர் பட்டயத்தை குறித்த பிரிவில் காட்சிப்படுத்தி செயற்பாடு தொடர்பாக மேற்பார்வை செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.
2018. 01.24 ஆம் திகதிய 02 / 2018 (1) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையாக தயாரிக்கப்பட்ட மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2023, 2024 ஆம் வருடத்திற்காக மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டத்தினூடாக ஒரு ஊழியருக்காக குறைந்த பட்சம் 12 மணித்தியாலய மேலதிக பயிற்சியொன்று விதிக்கப்பட்டிருக்கவில்லை	2023 அரச செலவுகளை கட்டுப்படுத்தல் சுற்றுநிருபத்தின் மூலம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டாலும் இலவசமாக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டதனால் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் 12 மணித்தியாலங்களை பூரணப்படுத்த முடியவில்லை.
அனைத்து பதவியணியினர் உள்ளடங்களாக செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் காணப்பட்டது.	செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டு இறுதிக் கட்டத்தில் உள்ளது.

நிறுவனத்தின் கணக்கு தொடர்பான கணக்காய்வுக் கருத்து கீழ் மட்டத்தில் / மறுப்பு நிலையில் / பாதகமான நிலையில் காணப்பட்டது	நிறுவனத்தின் கணக்கு தொடர்பான கணக்காய்வுக் கருத்து கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது
அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான பிரகடணங்களை சமர்ப்பித்திருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டாகும் போது அனைத்து உத்தியோகத்தர்களதும் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான பிரகடணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
நி.பி 119 இன் பிரகாரம் அறவிடப்படவேண்டிய மிகை வரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை	நி.பி 119 இன் பிரகாரம் அறவிடப்படவேண்டிய மிகை வரிகள் எதுவும் குறித்த வருடத்தில் அறவிடவேண்டி இருக்கவில்லை
உச்ச சேவைக் காலத்தை பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் உரிய முறையில் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை	உச்ச சேவைக் காலத்தை பூர்த்திசெய்துள்ள ஒன்றிணைந்த சேவைக்கு உரித்தான உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு மாவட்ட செயலகத்தின் உள்ளக இடமாற்றத்தின் மூலம் சரி செய்யக்கூடிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மாவட்ட சுற்றுச் சூழல் குழு குறைந்த பட்சம் 02 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கூட்டப்பட்டிருக்கவில்லை	02 மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் வருடத்திற்கு 06 சுற்றுச் சூழல் குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
நிலையான அபிவிருத்தி மற்றும் வண சீவராசிகள் அமைச்சின் 2016.11.17 ஆம் திகதிய SDW/3/16 – 2016 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் அறிவுருத்தல்களின் பிரகாரம் காட்டு யானைகளின் சேதங்கள் மற்றும் ஏனைய வண சீவராசிகளின் மூலம் ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பாக நட்டஈட்டுக் குழு கூட்டப்பட்டிருக்கவில்லை	இம்மாவட்டத்தில் காட்டு யானைகளின் சேதங்கள் தொடர்பாக சம்பவங்கள் அறிக்கைப்படுத்தப்படவில்லை மற்றும் ஏனைய விலங்குகளின் மூலம் ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பாக நட்டஈடுகள் செழுத்தப்படாமையின் காரணமாக இவ்வாரான குழுவொன்று இதுவரையில் செயற்படுத்தப்படாமை.

ஜே.ஏ.ஏ.ஸீ. நில்மல்கொட
பிரதான கணக்காளர்
கேகாலை மாவட்ட செயலகம்

J.A.A.C. Nilmalgoda
Chief Accountant
District Secretariat
Kegalle

ஜே.எம்.ஆர்.பீ. ஜயசிங்ஹ
மாவட்ட செயலாளர் அரசாங்க / அதிபர்
கேகாலை நிருவாக மாவட்டம்

J.M.R.P. Jayasinghe
District Secretary / Government Agent
Kegalle Administrative District

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்